### இணைய வழியில் விண்ணப்பித்த அன்றே – தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வாயிலாக

# விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கும் திட்டம்!

## தருமபுரி – அதியமான்கோட்டையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**தருமபுரி, ஆக. 19-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2025) தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் புதிய திட்டத்தை துவக்கிவைத்தார். இந்த திட்டமானது நாட்டிற்கே முன்னோடியான திட்டம் ஆகும்.**

2025-26-ஆம் ஆண்டிற்கான கூட்டுற வுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் "தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கப்படும்" என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

விவசாயப் பெருங்குடி மக்கள் பயிர்க் கடன் பெறுவதற்கு தொடர்புடைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நேரடியாகச் சென்று விண்ணப் பித்து, ஒரு வார காலத்திற்குள் அக்கடனைப் பெறும் நடைமுறையே தற்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்நடைமுறையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, இணையவழியில் (Online) பயிர்க்கடன் விண்ணப் பிக்கும் நடைமுறையும், விண்ணப்பித்த அன்றே விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பயிர்க்கடனை நேரடியாக வழங்கும் நடைமுறையும் தருமபுரி மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக (Pilot) செயல்படுத்தப்பட்டு, பின்னர் தமிழ்நாடு முழுவதும் விரிவு படுத்தப் படும். மேற்கண்ட அறிவிப்பினை நிறைவேற்றும் விதமாக முதற்கட்டமாக தருமபுரி மாவட்டத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை சேர்ந்த உறுப்பினர்கள் இணைய வழியில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள பொது சேவை மையத்திலோ, இணைய வழியிலோ தங்களது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க உறுப்பினர் எண் அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சேமிப்பு கணக்கு எண்ணைக் கொண்டு பயிர்க்கடன் விண்ணப்பிக்கும் மிக எளிமையான முறை உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நில உடைமை தொடர்பான விவரங்கள் வருவாய்த் துறையிடம் இருந்தும் பயிர்சாகுபடி தொடர்பான விவரங்கள் வேளாண் துறையிடம் இருந்தும் இணைய வழியில் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து, சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு இணைய வழியில் அனுப்பப்படும்.

சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயலாளர், மத்திய கூட்டுறவு வங்கியின் கள மேலாளர் மற்றும் கிளை மேலாளர் தங்கள் கணினி வழியே விவசாயிகள் குறித்த விவரங்களை சரிபார்த்து கடன் தொகையை அன்றைய தினமே விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைப்பர்.

இத்திட்டத்தை துவக்கி வைப்பதன் அடையாளமாக இன்று தருமபுரி மாவட்டம் அதியமான்கோட்டை தொடக்க வேளாண் மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் மற்றும் பாலஜங்கமனஅள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைச் சார்ந்த 5 விவசாயிகளுக்கு முதல்வர் அவர்களால் வட்டியில்லாத விவசாயக் கடன் வழங்கப் பட்டது.

இத்திட்டம் நடப்பாண்டிலேயே விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப் படும். இணையவழியில் கடன் பெறும் இத்திட்டம் படிப்படியாக சுய உதவிக் குழுக்களு க்கான கடன், சிறு, குறு வணிகக்கடன் என பிற வகைக் கடன்களையும் இணைய வழியிலேயே விண்ணப்பித்துப் பெறுமளவிற்கு நடப் பாண்டிலேயே விரிவுபடுத்தப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம் 1989-ஆம் ஆண்டு தருமபுரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. மேலும், தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப் பங்களைப் பதிவு செய்யும் முகாமினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.7.2023 அன்று தொடங்கி வைத்தார். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1908 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 117 வருடங்களாக செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதைத்தொடர்ந்து, இன்றையதினம், தொடக்க வேளாண்மைக் கூட்டுற வுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் புதிய திட்டத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இங்கு தொடங்கி வைக்கப்பட்டது சிறப்புக்குரியது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேசன், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதாசாகு, கூட்டுறவு சங்கங்களின் மாநில பதிவாளர்கள் நந்தகுமார், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதீஷ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

### வாக்காளர் திருத்தப் பணியின்போது

## வடமாநிலத்தவர் வசிக்கும் பகுதியில் உஷாராக இருக்க வேண்டும்!

### தி.மு.க.வினருக்கு புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா எச்சரிக்கை!

புதுச்சேரி, ஆக.19-

புதுச்சேரி மாநில திமுக தொகுதி செயலாளர்கள் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலுவலகத்தில் மாநில அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தலைமையில் நடைபெற்றது.

அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், துணை அமைப் பாளர் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் லோகையன், ஆறுமுகம், அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், பிரபாகரன், வேலவன், அமுதா குமார், நர்கீஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் திமுக அமைப்பாளர் இரா. சிவா பேசியதாவது: -

புதுச்சேரியில் பூத் லெவல் ஏஜென்ட் பட்டியலை தேர்தல் ஆணையத்தில் முதலில் கொடுத்தது திமுக தான். ஓரணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் தமிழ்நாட்டில் இல்லம் தோறும் சென்று உறுப்பினர் சேர்க்கும் பணியை முடிக்கும் தருவாயில் இருக்கின்றனர். புதுச்சேரியில் நாம் விரைவில் தொடங்க வேண்டும். ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள ஒவ்வொரு பூத்திற்கும் ஒரு தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளை நியமிக்க வேண்டும். பூத் அளவில் நியமிக்கப்படுபவர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். கழகத் தலைவரின் செயலை பின்பற்றி இன்று அதிக அளவில் திமுக-வில் இளைஞர்கள் இணைந்துள்ளனர். ஒரு சில இளைஞர்கள் சினிமாக்காரர் பின்னால் செல்லலாம். ஆனால் நாடு, மொழி, குடும்பத்தை பற்றி சிந்திப்பவர்கள் திமுக-வில் தான் இருப்பார்கள். தமிழ்நாட்டில் திமுக எவ்வளவு வேகத்தில், வளர்ச்சியில் உள்ளதோ அதே வேகத்தில் புதுச்சேரியில் நாமும் செயல்பட வேண்டும். தமிழ்நாடு திராவிட மாடல் ஆட்சி புதுச்சேரியிலும் மலர வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். உடல்நலம் சரியில்லாத போதும் மாநில வளர்ச்சிக்காகவும், எதிர்கால திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்த கழகத் தலைவர் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார். தற்போது முதலீடுகளை ஈர்க்க மீண்டும் வெளிநாடு செல்ல இருக்கிறார். ஆனால் புதுச்சேரியில் மாநில மக்கள், இளைஞர்கள் வளர்ச்சி பற்றி கவலைப்படாத அரசு உள்ளது. காவல் துறை முதல்வர், உள்துறை அமைச்சர் என இரு பிரிவாக செயல்படுகிறது. சமூக அமைப்புகள் என்ற பெயரில் காவல் அதிகாரிகளையே மிரட்டி பணம் பறிக்கும் கொடூரம் அரங்கேறி உள்ளது. இதையெல்லாம் ஒழிக்க ஒருங்கிணைந்த புதுச்சேரி என்ற இலக்கை நோக்கி செல்ல வேண்டும். அதை நாம் தான் ஒருங்கிணைக்க வேண்டும். தேசிய அளவில் பாஜக வாக்காளர் பட்டியலில் முறைகேட்டில் ஈடுபட்டு வருகின்றனர். நமக்கு வாக்களிப்பவர்களை நீக்குகின்றனர். இப்படிப்பட்ட மிருகத்தனமான ஆட்சியில் நாம் உஷாராக இருக்க வேண்டும். ஆனால் திமுக-விடம் பாஜக-வின் ஏமாற்று வேலை பலிக்காது. வடமாநில தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் தொகுதிகளில் வாக்காளர் திருத்த பணியின்போது பூத் ஏஜெண்டுகள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொகுதி செயலாளர்கள் சக்திவேல், திராவிடமணி, சீதாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், நடராஜன், சவுரிராஜன், சக்திவேல், தியாகராஜன், சிவக்குமார், ஆறுமுகம், மோகன். ரவிச்சந்திரன், ராஜாராமன், இளஞ்செழியபாண்டியன், ராதாகிருஷ்ணன், கலைவாணன், சத்தியவேல், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி மணிமாறன், இலக்கிய அணி மோகன்தாசு, மகளிர் அணி காயத்ரி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை சிவசங்கம், அமைப்புசாரா ஓட்டுனர் அணி மதிமாறன், விளையாட்டு மேம்பாட்டு அணி ரவிச்சந்திரன், மருத்துவர் அணி டாக்டர் ஆனந்த் ஆரோக்கியராஜ், அணித் தலைவர்கள் சண்முகசுந்தரம், கலைமாமணி எம்.எஸ். ராஜா, மதிவாணன், முகிலன், எம்.எஸ். முரளி, யோகேஷ் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி மாநில அமைப்பாளர் தமிழரசன், துணை அமைப்பாளர்கள் சிவதாசன், பாலபாரதி, எழிலரசன், அனந்தராமன், அருண், சுப்ரமணியன், பிரவீன் குமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அண்ணாரது திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழக மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமை செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம், மாவட்ட அவைத் தலைவர் ஒச்சுபாலு, மாவட்ட துணைச் செயலாளர் மூவேந்திரன், தீர்மானக்குழு அக்ரி கணேசன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சௌந்தர்ராஜன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.

---

### 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டத்தின் கீழ்

## செஞ்சியில் வயது முதிர்ந்தோர் - மாற்றுத்திறனாளிகளுக்கு ரேஷன் பொருட்கள்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி, ஆக.19-

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் செஞ்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்குச் சென்று ரேஷன் பொருட்களை வழங்கினார்.

வயது முதிர்ந்தோர் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரேஷன் பொருட்கள் வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து சேப்பெருமாள் தெருவில் உள்ள வயது முதிர்ந்தோர் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டத்தினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், கூட்டுறவுத் துறை பதிவாளர் வெங்கட்குமார், கூட்டுறவு சார் பதிவாளர்கள் மாரியப்பன், ரேவதி, செயலாட்சியர் கண்ணன், வட்டாட்சியர் துரைச்செல்வன், வட்ட வழங்கல் அலுவலர் குமரன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, முதுநிலை வருவாய் ஆய்வாளர்கண்ணன், செஞ்சி தொடக்க வேளாண்மை விவசாய கூட்டுறவுவங்கி செயலாளர் திருநாவுக்கரசு, வல்லம் மேற்கு ஒன்றிய செயலாளர் துரை, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, நகர செயலாளர் கார்த்திக் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்கிருஷ்ணமூர்த்தி அஞ்சலை நெடுஞ்செழியன் ஜான் பாஷா சங்கர் பொன்னம்பலம் சிவக்குமார், சங்கீதா சுந்தரமூர்த்தி, சீனுவாசன், நூர்ஜகான் ஜாபர், அகல்யாவேல், பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் ரசூல் பாஷா, சிவப்பிரகாசம், தொண்டரணி பாஷா, ஏழுமலை, கோகுல். பிரபா, அசோக், சரவணன், செந்தில், அறிவுடை நம்பி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெத்தானியாபுரம் பகுதி 1வது வார்டு விளாங்குடியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.தனச்செல்வம், பகுதி செயலாளர் மதி வெங்கடேஷ், வட்டச் செயலாளர் தேவராஜ், மாமன்ற உறுப்பினர் சர்மிளா தேவராஜ், பகுதிச் செயலாளர் சுதன், பொதுக்குழு உறுப்பினர் மனோகரன், பரவை பேரூர் செயலாளர் ராசாமணி, இளைஞரணி ஐயப்பன், வெற்றிச்செல்வன், அன்புச்செல்வன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.